## திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!










**தி.மு.க.**

**இளைஞர் அணி**

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்**
**புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–7 க்கு உட்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.03.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | திருவாரூர் | மலர் மஹால், வடசேரி சாலை, மன்னார்குடி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 04-03-2025






தி.மு.க.வை வளர்த்தவர்களில் ஒருவரும் கழக மூத்த முன்னோடியும் மேனாள் அமைச்சரும் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் செயலாளருமாக இருந்து மறைந்த புரவலர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் 32 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள அன்பில் சிலைக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் லியோனி, மதிவாணன் அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மோகன் உள்ளிட்ட கழகத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் - கழக தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

### ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

கிருஷ்ணகிரி, மார்ச் 7-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (5.3.2025) புதன் கிழமை மாலை 5 மணி, ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் எம். சின்ராஜ் தலைமை வகித்தார். நகர செயலாளர் கே என் ஆர் நாகராஜன் வரவேற்புரையாற்றினார். எல். ஆர். ஜெயராமன் எம். கணேஷ், என். சின்னப்பையன் ராமி, குணசேகரன் எம். முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக அமைப்பு துணைச் செயலாளர் பா. தாயம்கவி எம்எல்ஏ சிறப்புரை யாற்றினார். அமைச்சர் அர. சக்கரபாணி, மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., பி முருகன், எஸ்.ஏ. சத்யா மற்றும் கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், இன்னாள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA 2, BLC யூத் கமிட்டி முகவர்கள், மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட பிரதிநிதி பி. ரஜினி நன்றியுரை ஆற்றினார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (5.3.2025) புதன்கிழமை மாலை 5 மணி, ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்பு துணைச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர திமுக சார்பில் கழக இரு வண்ண கொடியேற்றி, தமிழ்நாடு நாட்டை எந்த சூழ்நிலையிலும் விட்டு தர மாட்டோம் என்று உறுதி மொழி நகர செயலாளர் என்.பி. வேல்முருகன் தலைமையில் எடுத்துக் கொண்டனர். பின்னர் அன்னதானத்தை பொது மக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், நகர மன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், சின்னபையன், ஜோதி, செல்வம், செல்வகுமார், அன்னக்கிளி, புஷ்பாவதி, மீராதேவி, சுகுணா, ராமசாமி, இளவரசு, குமார், சுப்ரமணி, சாந்தி, பரமசிவம், ஞானசேகர், கருணாநிதி, மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டினத்தில் நலஉதவிகள்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினர்!

சேலம், மார்ச் 7-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் உடையாப்பட்டி ஊராட்சியில் மாரியம்மன் கோவில் திடலில் 800 பெண்களுக்கு குத்துவிளக்கை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம், சுற்றுலா துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பெண்களுக்கு குத்து விளக்கை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட அவை தலைவர் மு.ரா.கருணாநிதி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளரும் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் அகரம் ராஜேந்திரன், குமரவேல், சின்னத்தம்பி, இன்பராசு, ஒன்றிய துணைச் செயலாளர் செந்தில் காந்திமதி, சின்னச்சாமி, அய்யாதுரை, செயற்குழு உறுப்பினர் சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் கோபால், ஒன்றிய பொருளாளர் பழனிவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாரதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யா குணசேகரன், செல்வரசி பழனிவேல், சுப்பிரமணி இந்திராணி, ஆறுமுகம், நாகராஜ், அன்னக்கொடி, சுமதி, குப்புசாமி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சாந்தி பெருமாள், பேரூராட்சி செயலாளரும் பேரூராட்சி தலைவர் பாபு, துணைத்தலைவர் செல்வ சூர்யா சேதுபதி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பரந்தாமன், பேரூராட்சி கவுன்சிலர்கள் திருமுருகன், தீனதயாளன், மணியம்மாள், குமார், பிரபாகரன், பிரேமா தனசேகரன், ராணி அர்ஜுனன், மாவட்டம் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் அனிதா, கலை இலக்கிய மாவட்ட சுந்தரவதனம், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தர்மசாஸ்தா, ஒன்றிய விளையாட்டு அமைப்பாளர் கண்ணன், பேரூராட்சி துணை செயலாளர் சுபாஷினி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கலை, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இந்தித் திணிப்பு எதிர்ப்பு, பட்ஜெட்டில் பாரபட்சம்,தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்தையும்,தமிழக மக்களையும் பலவீனப்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் சூலூர் சட்டமன்றத் தொகுதி சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியம் செலக்கரச்சல் ஊராட்சியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மகாலிங்கம், கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துமாணிக்கம் உள்ளிட்ட அனைத்து ஒருங்கிணைந்த ஒன்றிய நிர்வாகிகள், செலக்கரச்சல் ஊராட்சியின் கழக நிர்வாகிகள் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், சுல்தான்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து முன்னணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கோவை தெற்கு மாவட்ட இளைஞரணியினர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி, ஏற்காடு ஒன்றிய தி.மு.க. சார்பாக ஒன்றிய கழகச் செயலாளர் ராஜா(எ)ராஜேந்திரன் தலைமையில் இந்தித் திணிப்பு மற்றும் மக்களவைத் தொகுதி மறு சீரமைப்பை எதிர்த்தும் உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட ஆதி திராவிட நலக்குழு அமைப்பாளர் பாலு, தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் விஜயகுமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் புஷ்பராணி கருணாநிதி, அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதி முருகேசன் சித்தேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் சின்னத்தம்பி, தங்கமாஸ்தான், அருணாச்சலம், சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ஆதிசங்கர், ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.